<u>தேதி:-26.03.2021 அசல்வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)</u>

<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி:- (7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

வா.சா.ஆ.11 க்கு 1 ஆம் பிரதிவாதி கொடுத்த பதில்அறிவிப்பை நான் பார்க்கவில்லை. வா.சாஆ.11 அறிவிப்பை எப்போது யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு 4 ஆம் பிரதிவாதி கொடுத்தார். புலஎண்.244/2 ல் என் பாட்டனார் கிருஷ்ணசாமிநாயுடுவிற்கு 2.36 ஏக்கர் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதில் கிழபுறமாக 1.18 ஏக்கர் என் தகப்பனாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பாகமே ஏற்படவில்லை. மேற்குப்புற 1.18 ஏக்கர் 4 முதல்6 பிரதிவாதிகளின் தகப்பனார் சுந்தரராஜன் நாயுடுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிழபுறமுள்ள 1.18 ஏக்கர் நிலத்தை கோவிந்தராஜன்நாயுடு விற்றுவிட்டார் என்றால் சுந்தர்ராஜன் நாயுடு, கோவிந்தராஜன் நாயுடு, ஜெயராம்நாயுடு ஆகிய மூவரும் சேர்ந்து விற்றுவிட்டார்கள். அந்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். தேதி ஞாபகமில்லை 1967 ல் விற்றுவிட்டார்கள் என்று நினைககிறேன். அந்தப் பத்திரத்தில் கோவிந்தராஜநாயுடு பட்ட கடனிற்காக சொத்து விற்கப்பட்டதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். சாட்சி தானாக முன்வந்து கடனை மூவரும் பகிர்ந்து கொண்டார்கள் என்று கூறுகிறார். மூவரும் கடனை பகிர்ந்து கொண்டதாக பத்திரத்தில் வாசகம் இல்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்குப்புறமுள்ள 1.18 ஏக்கர் நிலத்தை சுந்தரராஜன் நாயுடு விற்றுவிட்டார் என்றால் கோவிந்தராஜன் நாயுடு, சுந்தர்ராஜன் நாயுடு, ஜெயராம்நாயுடு மூவரும் சேந்ர்து விற்றுவிட்டார்கள். அந்த பத்திரத்தை பார்த்துள்ளேன். அந்தப் பத்திரம் 1963 ல் ஏற்பட்டது. பத்திரத்தில் சுந்தர்ராஜநாயுடுவிடம் கிரையத்தொகை கொடுக்கப்பட்டதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பே ஏற்பட்ட ஈடுகடன்தொகையை கட்டிவிட்டு பாக்கித்தொகையை மூவரும் பகிர்ந்து கொண்டார்கள் என்று சாட்சி தானாக முன்வந்து கூறுகிறார். மூவரும் பகிர்ந்து கொண்டார்கள் என்ற வாசகம் பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். பத்திரம்

எழுதிய பிறகு பகிர்ந்து கொண்டார்கள். பத்திரம் எழுதிய பிறகு கிரையத்தொகையை மூவரும் பகிர்ந்து கொண்டதாக காட்ட ஆதாரம் இல்லை. கிழபுறமுள்ள 1.18 ஏக்கர் நிலத்தை கருப்பாயிஅம்மாள் என்பவருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அதன் தேதி 09.03.1967 என்றால் சரிதான். மேற்குப்பக்கம் உள்ள 1.18 ஏக்கர் நிலத்தை விற்ற தேதி 29.08.1963 என்றால் சரிதான். ஈடுகடனை 1963 கிரையப்பத்திரத்தில் காட்டித்தான் கிரையம் எழுதிக் கொடுத்திருப்பதாக சாட்சி தானாக முன்வந்து கூறுகிறார். என் வயது தற்போது 64 என்றால் தவறு. என் வயது 66. வழக்குரையில் என் வயது 61 என்று காட்டியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிரையப்பத்திரங்கள், ஒத்திப்பத்திரம் ஆகியவை நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது ஏற்பட்டவை என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் பற்றி முதன்முதலில் எனக்கு எப்போது தெரியுமென்றால் எனக்கு ஞாபகமில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை. 7 முதல் 9 பிரதிவாதிகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 1 முதல் 3 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகளில் 1962 ல் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை பற்றியும், 1963 மற்றும் 1967 ல் ஏற்பட்ட கிரையப்பத்திரங்கள் பற்றியும் விளக்கமாக சொல்லியுள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஜெயராம்நாயுடு தாவாச் சொத்தை 19.03.1965 ல் ஒத்தி வைத்துள்ளார் என்றால் மூவரும் சேர்ந்து வைத்தார்கள். ஒத்திப்பத்திரத்தை பார்த்துள்ளேன். நான் பார்த்த பத்திரங்கள் பதிவு நகல்கள் என்றால் சரிதான். ஒத்திப்பத்திரத்தில் தனக்கு வந்த பாகத்தை ஜெயராம்நாயுடு ஒத்தி வைத்ததாக வாசகம் உள்ளது என்றால் சரியல்ல. ஜெயராம்நாயுடுவின் குடும்பசெலவிற்காக ஜெயராம்நாயுடு ரூ.1,000/- ஒத்தியின் அடிப்படையில் கடன் வாங்கியதாக ஒத்திதப்பத்திரத்தில் வாசகம் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ஜெயராமநாயுடு 1967 ல் காலமானார். அவர் காலமான பிறகு அவரது

மனைவி சொத்தை 13.06.1978 ல் மீட்டுக் கொண்டார் என்றால் மற்ற இருவரின் சம்மதத்துடன் மீட்டுக் கொண்டார். மற்ற இருவர் சம்மதம் கொடுத்தாக எழுத்துமூலமான ஆதாரம் இல்லை. அவ்வாறு ராணியம்மாள் சொத்ததை மீட்டுக் கெண்டு விபரம்நான் சிறியவயதில் இருக்கும் போதே தெரியும். திருப்பப்பட்ட ஒத்திப்பத்திரம் ராணியம்மாளிடம் தான் இருந்தது என்றால் சரிதான். ராணியம்மாள் 22.09.2000 ல் காலமானார் என்றால் சரிதான். ராணியம்மாள் சொத்தை மீட்டுக் கொண்ட பிறகு அவர் பெயரில்தான் சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் இருந்தது என்றால் சரியல்ல. மூவர் பெயரிலும் இருந்தது. பசலி ஆண்டு 1397 க்குப் பிறகு ராணியம்மாள் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் மாற்றப்பட்டது என்றால் பட்டா மாற்றப்பட்டது எனக்குத் தெரியாது. சாட்சி மீண்டும் பசலி 1397 க்கு பிறகு ராணியம்மாள் பெயரில் எங்களுக்குத் தெரியாமல் மாற்றிக் கொண்டார்கள் என்று கூறுகிறார். மூன்று சகோதரர்களின் வாரிசுகளும் சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதாக காட்ட ஆவணம் இல்லை. 1978 ல் சொத்தை மீட்டுக் கொண்ட தேதியில் இருந்து ராணியம்மாள் தனித்த ஏகபோக உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. மகசூலில் எங்களுடைய பாகத்தை அவர் கொடுத்து வந்தார். அவர் நெல் விவசாயம் செய்து வந்தார். மகசூலில் எங்களுக்கு பங்கு கொடுத்து வந்தார் என்பதற்கான ஆதாரம் இல்லை. 1951 ல் சங்கிலிநாயுடு வாரிசுகள் இல்லாமல் இறந்து போனதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன். அவருக்கு முன்பாகவே கிருஷ்ணசாமிநாயுடுவும் காலமாகிவிட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.